1979 மார்ச் 10]

5. கவன ஈர்ப்புகள்

(அ) சென்னையில் செங்கல்சூளைகளை வைத்து இருப்பவர்கள் பொது விதிமுறைகளை மீறி நடப்பது குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல் சூளை வைத்திருப்பவர்கள் செங்கல்சூளைகளில் விதிமுறைகளைத் தவறாகப் பயன்படுத்தியும், தாங்கள் தொடர்ந்து தொழில் நடத்துவதற்கென சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் மீறிச் செயல்படுவதன் காரணமாக சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களில், குறிப்பாக வில்லிவாக்கம் தொகுதியில் வாழும் மக்கள் அவல நிலைமைக்கு உள்ளாகியுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 12.10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் வில்லிவாக்கம் ஊராட்சிப் பகுதியில் 4 செங்கல்சூளைகள் உள்ளன. இதுபோல், முன்னாள் கொளத்தூர் ஊராட்சிப் பகுதியில் 8 செங்கல் சூளைகள் உள்ளன. 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளைக்குப் பின், இப்பகுதிகள் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட்டதிலிருந்து 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கு உட்பட்டு வருகின்றன. தற்போது செங்கல் தயாரிக்கும் பருவம் இல்லாததால், இச்சூளைகள் இயங்கவில்லை. இவைகள் ஏரிப் பகுதிகளில், வயற்காட்டில், திறந்த வெளியில் இருப்பதால், பொது மக்களுக்கு புகையினால் தொல்லை இல்லையென்று அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செங்கல்சூளைகளிலே வெளியிலே இருந்து ஆட்களைக் கொண்டு வந்து, கொத்தடிமைகள் போல் மிகக் குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள் என்பது ஒன்று. அதிகமான செங்கல்சூளைகள் வில்லிவாக்கம் தொகுதியிலே அயம்பாக்கம் போன்ற இன்னும் 4, 5 ஊர்களிலே வைக்கப்பட்டு, மிகக் குறைந்த அளவுக்கு கூலி கொடுக்கப்பட்டு, செங்கல் உற்பத்தி செய்யப்பட்டு, ஒன்றுக்குப் பத்தாக விலை விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பது மற்றொன்று. இந்தத் தொழிலிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. இதைப்பற்றி அமைச்சர் இராகவானந்தம் அவர்களுக்கும் கவலையில்லை. அப்படிப்பட்ட நிலைமையிலே ஒவ்வொரு கிராமங்களிலும் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குகிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டும் இதற்கு ஆதரவு 3 அடிகள்தான் தோண்ட வேண்டுமென்று விதி இருக்கிறது.

இதைப்பற்றி இந்த ரெவின்யூ அதிகாரிகள்கண்டும் காணாதது போல்இருந்து விடுகிறார்கள். இவர்கள் இஷ்டப்படி பள்ளம் தோண்டுவதால், வீடுகள் இடிந்து விழக்கூடிய நிலைமை, அப்படிப் பட்டஅபாயமான ஒரு சூழ்நிலை அந்தக் கிராமங்களிலே ஏற்பட்டி ருக்கிறது. அந்தத் தொழிலாளிகளுக்கு கூலியும் கொடுப்பதில்லை. இதையெல்லாம் கேட்டால், பார்ப்பதற்கு நேரமில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். சிறு தொழில்கள் அமைச்சருக்குச் சொல்லலாம் என்று பார்த்தால், அவர்களும் இங்கில்லை. இப் படிப்பட்ட தவறான போக்கு இருக்கிறது. கோயம்பேட்டிலே முசிறிபுத்தன் அவர்கள் சட்டவிரோதமான போக்கிலே ஒரு பாக்டரி வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர் பார்லிமெண்டரி செகரட்டரி.................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏதோ இங்கு கொஞ்சம் பேசிக் கொண்டிருந்தால், தங்களை கவனிக்கவில்லை என்று தாங்கள் படபடவென்று எங்கெங்கேயோ ஓடுகிறீர்களே, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லக் கூடியதைத்தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட செங்கல் சூளை களால் கிராமங்களிலே உள்ள வீடுகள் எல்லாம் இடிந்து விழக் கூடிய மிகுந்த அபாயமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்? இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா, அதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் பிறப் பிக்கப்பட்டுள்ள துணை விதிகளின்படி, மாநகராட்சி எல்லைக்குள் செங்கல்சூளைகள் அமைத்து நடத்தத் தடை இருக்கிறது. ஆனால், 1959-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின், பிரிவு III-ன் படி, குறிப்பிட்டுள்ள பகுதிகளில், சம்பந்தப்பட்ட ஊராட்சி களிடமிருந்து உரிமம் பெற்று செங்கல்சூளைகள் நடத்தலாம். ஆகவே, விதி முறைப்படி, இதற்குக் கட்டுப்படாமல் நடந்துள்ள வர்களின்மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தயா ராக இருக்கிறது.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த உரிமம் பெறுவது ஊராட்சிகளிலே மட்டுமல்ல. ரெவின்யூ டிபார்ட்மென்டிலேயும் அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது, ஆனால், இந்த ரெவின்யூ டிபார்ட்மென்டிலே உள்ள தாசில்தார் போன்ற அதிகாரிகள் பார்த்தும் பார்க்காததுபோல் இருப்பதால், 3 அடிக்கு 30 அடி தோண்டி விடுகிறார்கள். நாம் கேட்டால், நம்மையே அதிலே வைத்து மூடி விடுவார்கள். எனவேதான் ரெவின்யூ அமைச்சரின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரலாம் என்றால், அவரும் இருக்கையிலே இல்லை.

1979 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தாங்கள் சொல்வதைக் குறித்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : நான் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ஆம் தேதியன்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, விதி 42-ன் கீழ் கொடுத்திருந்தேன். அப்படிக் கொடுத்ததை 41-வது விதியின்கீழ் மாற்றியதாக எனக்கு 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26-ம் தேதியன்று அறிவிக்கப்பட்டது. இப்போது சென்னையில், குடிநீர் கழிவுநீர் கலந்து...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வாரத்தில் இது எடுத்துக் கொள்ளப்படும். உட்காருங்கள்.

(ஆ) கலசபாக்கம் கிராமங்களில் யானைக்கால் நோய் பரவுவதை தடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கவன ஈர்ப்பு கொடுத்துள்ள உறுப்பினர் மாண்புமிகு திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் இருக்கையில் இல்லாமையால், அவர் சார்பாக திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, ''கலசபாக்கம் தொகுயில் உள்ள வேடந்தாவடி, கலசபாக்கம் கிராமங்களில் யானைக்கால் நோய் பரவி உள்ளதன் காரணமாக பொதுமக்களிடையே பதட்ட நிலை நிலவுவதால், அந்நோயைத் தடுப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்த' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வட ஆற்காடு மாவட்டம் யானைக்கால் வியாதி அதிகமாகப் பரவும் வாய்ப்புள்ள பகுதியாகும்.

வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூர், இராணிப்பேட்டை, வந்தவாசி, செய்யாறு, காவேரிப்பாக்கம், சத்துவாச்சேரி, பள்ளிக்கொண்டா, ஆகிய இடங்களில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.